# எப்படி நாங்கள் கைகளை சரியாகக் கழுவலாம்?

**சரியான முறையில் கைகளைக் கழுவுவது மிக முக்கியம். கிருமிகளைச் செயலிழக்கச் செய்வதற்கு, சவர்க்காரம் மட்டும் போதாது. முதலில் சவர்க்காரமிட்டு, கைகளை உரஞ்சி, தண்ணீரில் கழுவி அதோடு காய விட வேண்டும்.**



**எப்படி?**

- கைகளை ஓடிக்கொண்டிருக்கும் இளம்சூடான தண்ணீரின் கீழ் நனைக்க வேண்டும்.
- கைகளுக்கு சவர்க்காரமிடவும், இயலுமென்றால் திரவத் தன்மையான சவர்க்காரம்.
- கைகளை அவை நுரைக்கும் வரை உரஞ்சவும். அதேநேரம் பின்கை, விரல்களுக்கு இடையில், விரல் நகங்களுக்குக் கீழ், கைமூட்டுக்கள் போன்றவற்றை சுத்தம் செய்வதற்கு மறக்க வேண்டாம்.
- கைகளை ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரின் கீழ் நன்றாகக் கழுவ வேண்டும்.
- கைகளை காய வைப்பதற்கு, இயலுமென்றால் ஒரு துடைத்தபின் எறியும் பேப்பர் அல்லது ஒரு கை துடைப்பதற்காக உருளைபோல் சுருட்டியிருக்கும் துணிச் சுருளில் (பாவிக்காத இடத்தை உபயோகிக்கவும்) அல்லது காற்றில் காய விடவும்.

**எப்போ நாங்கள் கைகளை கழுவ வேண்டும்?**
**இயலுமான அளவு அடிக்கடி அதோடு விஷேஷமாக:**

- சாப்பாட்டை தயாரிக்கும் முன்
- சாப்பிட முன்
- மூக்குச் சீறிய பின், தும்மல் அல்லது இருமிய பின்
- ஒவ்வொரு முறையும் வீட்டிற்கு திரும்பி வரும்பொழுது
- எல்லோருக்கும் பொதுவான போக்குவரத்து சாதனத்தை உபயோகித்த பின்

**எப்போ நாங்கள் கண்டிப்பாக கைகளை கழுவ வேண்டும்?**

- மல சல கூடத்திற்கு போய் வந்த பின்
- கழிவுப் பொருட்களுடன் சம்மந்தப்பட்ட பின்
- எங்களுடைய கைகள் அழுக்காக இருந்தால்

**சரியான சவர்க்காரம்**

இயலுமான அளவு திரவத் தன்மையான சவர்க்காரத்தை உபயோகிக்கவும். கட்டிச் சவர்க்காரம் ஈரத்தன்மையாக இருப்பதனால் தொற்றுநோயைத் தோற்றுவிக்கும் (பரப்பும்) விஷக் கிருமிகளை அதற்குள் வைத்திருக்கும்.

**கிருமிநாசினி**

ஒரு கிருமிநாசினியை கைகளுக்கு உபயோகிப்பது அவசியம-ல்லை.